1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கு நகர சபைகளின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அவர்கள் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களின் கருத்துக்கள் அரசுக்கு வந்ததற்குப் பிறகு அதுபற்றி முடிவு எடுக்க வேண்டிவரும். அவர்கள் கருத்துக்கள் எல்லாம் திரட்டப்பட்டு வருகிறது. அது வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்

*** 335 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு, ஓய்வு ஊதியம் வழங்கும்பொழுது, பஞ்சப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 26—2—1970-ம் தேதியோ அல்லது அதன் பிறகோ நகராட்சிப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் பொழுது 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திய பஞ்சப்படியையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று அரசு, தனது ஆணை எண் 1988 (நிலை) கல்வி, நாள் 17—11—1971-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : அது நகரசபைகளில் அமுலாக்கப் பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 17—11—1971-ல் அந்தப் பஞ்சப்படியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால் அதன் அடிப்படையில் இப்போது சம்பளம் வழங்கப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

*** 336 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் எழுத்தர்கள், சுகாதார உதவியாளர்கள், மருத்துவ மாதுகள், கடைநிலை ஊழியர்கள், ஆயாக்கள், இரவு காவலர்கள் இவர்களுக்கு ஓய்வு